பிரிவு – 1

தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் (வரை)

(ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)

சிஐஎன் : யூ15421டிஎன்1974எஸ்ஜிசி006753

பதிவு அலுவலகம்: ஆவின் இல்லம், 2வது தளம், 3A, பசும்பொன் முத்துராமலிங்கனார் சாலை, நந்தனம், சென்னை – 600 035

51–ஆவது வருடாந்திரப் பேரவைக் கூட்டம்
நுழைவுச் சீட்டு

(கூட்ட நுழைவு வாயிலில் கொடுக்கவும்)

கூட்ட நாள் : 29.09.2026 செவ்வாய் கிழமை பதிவேட்டு எண்:

நேரம் : காலை 11.00 மணி

இடம் : தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கம், தஞ்சாவூர்

பங்குதாரரின் பங்குகளின் எண்ணிக்கை :

இப்பேரவைக் கூட்டத்திற்கு எனது வருகையை பதிவு செய்கிறேன்.

1) பங்குதாரர் பெயர்
மற்றும் முழு முகவரி
கைபேசி எண்

பங்குதாரர் கையொப்பம்

2) பதிலாள் பெயர் பதிலாள் கையொப்பம்

நுழைவுச் சீட்டு / பதிலாள் படிவம் பற்றிய குறிப்புகள்

1. பேரவைக் கூட்டத்தில் கலந்து கொண்டு வாக்களிக்க தகுதி உடைய உறுப்பினர் தனக்கு பதிலாக கலந்து கொண்டு வாக்கு அளிக்க ஒரு பதிலாளை நியமிக்கலாம்.

2. மேற்கூறிய பதிலாள் நிறுவனத்தின் பங்குதாரராக இருக்க வேண்டும் என்பதில்லை.

3. பூர்த்தி செய்யப்பட்ட பதிலாள் படிவம் கூட்டம் துவங்குவதற்கு 48 மணி நேரம் முன்னதாக நிறுவனத்தின் பதிவு அலுவலகத்திற்கு கிடைக்கும்படி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

4. ஒரு நபர் அதிகபட்சம் 50 பங்குதாரர்களுக்கு மட்டுமே பதிலாளாக செயல்பட முடியும்.

5. பதிலாள் படிவத்தில் 3 பதிலாட்களின் பெயர்கள் குறிப்பிட்டிருந்தாலும், அம்மூவரில் ஒருவர் மட்டுமே கூட்டத்தில் பதிலாளாக கலந்துகொள்ள இயலும்.

6. பங்குதாரர் / பதிலாள் பேரவைக் கூட்டத்தில் கலந்து கொள்ள வரும்போது நுழைவுச் சீட்டில் தங்களது பெயர், முகவரி, கைபேசி எண், பேரேட்டு எண், பங்குகளின் எண்ணிக்கை ஆகியவைகளை பூர்த்திசெய்து கொண்டுவர வேண்டும்.

பதிலாள் படிவம்

நிறுவனத்தின் எண் : யூ15421டிஎன்1974எஸ்ஜிசி006753

நிறுவனத்தின் பெயர் : தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் (வரை)

பதிவு அலுவலகம் : ஆவின் இல்லம், 2வது தளம்,
3–ஏ, பசும்பொன் முத்துராமலிங்கனார் சாலை,
நந்தனம், சென்னை 600 035

உறுப்பினர் பெயர்	:
முகவரி	:
மின்னஞ்சல்	:
கைபேசி எண்	:
பதிவேட்டு எண்	:

மேற்குறிப்பிட்டுள்ள நிறுவனத்தில் ---------- (பங்குகள் எண்ணிக்கை) பங்குகள் வைத்திருக்கும் பங்குதாரராகிய நான் இதன் மூலம்

1. பெயர் :
   முகவரி :

   மின் அஞ்சல் :
   கைபேசி எண் :

இவர் கூட்டத்திற்கு வர இயலவில்லையெனில்

2. பெயர் :
   முகவரி :

   மின் அஞ்சல் :
   கைபேசி எண் :

இவர் கூட்டத்திற்கு வர இயலவில்லையெனில்

3. பெயர் :
   முகவரி :

   மின் அஞ்சல் :
   கைபேசி எண் :

என்பவரை 29.09.2026 செவ்வாய்கிழமை காலை 11.00 மணி அளவில் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற இருக்கும் நிறுவனத்தின் 51 –ஆவது வருடாந்திரப் பேரவைக் கூட்டத்தில் எனக்குப் பதிலாக கலந்துகொண்டு கீழ்க்கண்ட தீர்மானங்கள் மீது வாக்கு பதிவு செய்ய என்னுடைய பதிலாளாக நியமனம் செய்கிறேன்.

தீர்மானங்கள்

1. தணிக்கை செய்யப்பட்ட 2025–26–ஆம் ஆண்டு தனித்த ஐந்தொகை லாப நட்டக்கணக்குகளுக்கும், ஐந்தொகை லாப நட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கணக்குகளுக்கும் ஒப்புதல் வழங்குதல்.

2. திரு. R. கண்ணன், இ.ஆ.ப. அவர்களை தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநராக நியமனம் செய்தல்

3. Dr.K.V. முரளிதரன், இ.ஆ.ப., வேளாண்மை இயக்குநர் அவர்களை இயக்குநராக நியமனம் செய்தல்

4. திருமதி. R. ரேவதி, இஆ.ப., தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அவர்களை இயக்குநராக நியமனம் செய்தல்

பங்குதாரரின் கையொப்பம் :

1 ரூபாய் ரெவன்யூ ஸ்டாம்ப் ஒட்டி கையொப்பம் இடவும்

பதிலாளர்களின் கையொப்பம் : 1.

2.

3.

தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் (வரை)

தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்

திரு. R. கண்ணன், இ.ஆ.ப.,

இயக்குநர்கள்

Dr. K.V. முரளிதரன், இ.ஆ.ப..,

திருமதி. R. ரேவதி, இ.ஆ.ப.,

திருமதி. M. அருணா, இ.ஆ.ப

திரு.V.K. ஆனந்தராமன்

திருமதி. T. ரமணிதேவி

திருமதி. P.G. கலைவாணி

திரு. S. ராமன்

Dr. D. சசிகுமார்

நிறுமச்செயலர்:

திரு. A. சங்கரலிங்கம்

தலைமை கணக்கு அலுவலர்

திரு. C. ஆறுமுகம்

சட்டரீதியான தணிக்கையாளர்கள்

திரு. இ.ராதாகிருஷ்ணன் & அசோசியேட்ஸ்

செயலக தணிக்கையாளர்கள்

திருவாளர்கள் S. தனபால் & அசோசியேட்ஸ்

வங்கிகள்

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, குருங்குளம்
இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, தஞ்சாவூர்

பதிவு அலுவலகம்

ஆவின் இல்லம், 2வது தளம், 3–ஏ, பசும்பொன்
முத்துராமலிங்கனார் சாலை, நந்தனம், சென்னை– 600 035.

அலகுகள்

1) அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை, குருங்குளம், தஞ்சாவூர் மாவட்டம்.

2) மதுரை சர்க்கரை ஆலை, பாண்டியராஜபுரம், மதுரை மாவட்டம்.

துணை நிறுமம்

பெரம்பலூர் சர்க்கரை ஆலை (வரை)

பதிவு அலுவலகம் :

ஆவின் இல்லம், 2வது தளம், 3–ஏ, பசும்பொன்
முத்துராமலிங்கனார் சாலை, நந்தனம், சென்னை–600 035.

பொருளடக்கம்

பிரிவு 1	**பக்கம்**
1. நுழைவுச்சீட்டு	1
2. பதிலாள் படிவம்	3
3. பொருளடக்கம்	5
4. பங்குதாரர்களுக்கு அறிவிப்பு	7
5. இயக்குநர்களின் அறிக்கை	11
பிரிவு 2	
1. ஐந்தொகைக் குறிப்பு	36
2. இலாப நட்டக் கணக்கு	37
3. கணக்கின் மீதான குறிப்புகள்	38
4. பண நடமாட்டம் பற்றிய அறிக்கை	57
5. சுயாதீன தணிக்கையாளர்களின் அறிக்கை	71
6. இந்திய தலைமை கணக்காய்வு மற்றும் தணிக்கைத் தலைவரின் கருத்துரை	92
பிரிவு 3	
1. ஒருங்கிணைக்கப்பட்ட கணக்குகள்	94
2. இந்திய தலைமை கணக்காய்வு மற்றும் தணிக்கைத் தலைவரின் கருத்துரை	138

தணிக்கைக் குழு

திரு.V.K. ஆனந்தராமன்

Dr. D. சசிகுமார்

குறிப்பு

51–ஆவது ஆண்டறிக்கையில் கண்டுள்ள பேரவைக்கூட்ட அறிவிப்பு, இயக்குநர்கள் மற்றும் தணிக்கையாளர்களின் அறிக்கைகள், தணிக்கை செய்யப்பட்ட கணக்குகள், இந்திய தலைமை கணக்காய்வு மற்றும் முதன்மை தணிக்கைத்தலைவரின் கருத்துரை மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட கணக்குகள் ஆகியவைகளின் அங்கீகரிக்கப்பட்ட ஆங்கில படிவத்தின் தமிழாக்கம் ஆகும்.

தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் (வரை)

(ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)

சிஐஎன் : யூ15421டிஎன்1974எஸ்ஜிசி006753

பதிவு அலுவலகம்: ஆவின் இல்லம், 2வது தளம், 3A, பசும்பொன் முத்துராமலிங்கனார் சாலை, நந்தனம், சென்னை – 600 035

பங்குதாரர்களுக்கான அறிவிப்பு

தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் (வரை) 51–வது வருடாந்திரப் பேரவைக் கூட்டம், 2026–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29ஆம் தேதி செவ்வாய் கிழமை காலை 11.00 மணியளவில் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கத்தில் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்படும் என இந்த அறிவிப்பு வாயிலாக அறிவிக்கப்படுகிறது.

சாதாரணப் பணிகள்

1. 2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31–ஆம் நாளன்று உள்ளவாறு, இந்நிறுவனத்தின் தணிக்கை செய்யப்பட்ட தனி ஐந்தொகைக் குறிப்பு, 2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31–ஆம் தேதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான இந்நிறுவனத்தின் தனி இலாப நட்டக் கணக்கு, அவற்றின் மீதான இயக்குநர்களின் அறிக்கை, தணிக்கையாளர்களின் அறிக்கை, 2025–26 ஆண்டின் ஒருங்கிணைக்கப்பட்ட ஐந்தொகைக் குறிப்பு, ஒருங்கிணைக்கப்பட்ட இலாப நட்டக் கணக்கு, ஒருங்கிணைக்கப்பட்ட கணக்குகளின் மீதான தணிக்கையாளர்களின் அறிக்கை ஆகியவற்றைப் பெற்று, பரிசீலனை செய்து அங்கீகரித்தல்.

2. கீழ்க்கண்ட தீர்மானத்தைப் பரிசீலனை செய்து, தகுதி உடையதெனக் கருதினால், அவ்வாறாகவோ அல்லது மாற்றங்களுடனோ, சாதாரணத் தீர்மானமாக நிறைவேற்றுதல்:

   ‘‘திரு. R. கண்ணன், இ.ஆ.ப., அவர்கள் இந்நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநராக நியமனம் செய்யப்படுகிறார் எனத் தீர்மானிக்கப்படுகிறது.’’

3. கீழ்க்கண்ட தீர்மானத்தைப் பரிசீலனை செய்து தகுதி உடையதெனக் கருதினால், அவ்வாறாகவோ அல்லது மாற்றங்களுடனோ, சாதாரணத் தீர்மானமாக நிறைவேற்றுதல்:

   “Dr.K.V.முரளிதரன், இ.ஆ.ப., வேளாண்மை இயக்குநர் அவர்கள் இந்நிறுவனத்தின் இயக்குநராக நியமிக்கப்படுகிறார்.’’

4. கீழ்க்கண்ட தீர்மானத்தைப் பரிசீலனை செய்து தகுதி உடையதெனக் கருதினால், அவ்வாறாகவோ அல்லது மாற்றங்களுடனோ, சாதாரணத் தீர்மானமாக நிறைவேற்றுதல்:

   ‘‘திருமதி. R. ரேவதி, இ.ஆ.ப., தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர். அவர்கள் இந்நிறுவனத்தின் இயக்குநராக நியமிக்கப்படுகிறார்.’’

// இயக்குநர்கள் குழுவின் ஆணைப்படி //

இடம் : சென்னை
நாள் : 19.08.2026

திரு. R. கண்ணன். இ.ஆ.ப
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்

குறிப்புகள்

1. பேரவைக் கூட்டத்தில் கலந்து கொண்டு வாக்களிக்க தகுதி பெற்ற அங்கத்தினர் தனக்கு பதிலாக வாக்களிக்கும் பொருட்டு வேறொருவரை நியமிக்க உரிமையுண்டு. அவ்வாறு நியமிக்கப்படுபவர் நிறுவனத்தின் அங்கத்தினராக இருக்க வேண்டுமென்பதில்லை.

2. பதிலாள் உரியமுறையில் செயல்படுவதற்கு, பதிலாள் படிவத்தை பூர்த்தி செய்து, கையொப்பமிட்டு, இப்பேரவைக் கூட்டம் துவங்குவதற்கு 48 மணி நேரத்திற்கு முன்பாக, இந்நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

3. 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டம், பிரிவு 102–க்கு இணங்க, இனம் எண் 2 முதல் 4 வரை எண்ணுள்ள பணிகள் பற்றிய விளக்க அறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

4. 15 .09.2026 முதல் 29.09.2026 வரை (இவ்விரு நாட்களும் உட்பட) நிறுவனத்தின் உறுப்பினர்கள் பதிவேடுகளும் மற்றும் பங்கு மாற்றுப் புத்தகங்கள் மூடப்பட்டிருக்கும்.

5. பங்குதாரர்கள் 51–ஆவது ஆண்டறிக்கையின் மீது தாங்கள் தெரிந்து கொள்ள விரும்பும் விவரங்கள் குறித்து வினாக்களை வருடாந்திரக் கூட்டத்திற்கு 7 நாட்கள் முன்னதாக பதிவு அலுவலகத்திற்கு தெரியப்படுத்தினால் தேவைப்படும் தகவல்களை சேகரித்து கூட்டத்தில் பதில் அளிக்க ஏதுவாக இருக்கும்.

6. பங்குதாரர்கள் தங்கள் முகவரியில் ஏதேனும் மாற்றம் இருந்தால், உடனே இவ்வலுவலகத்திற்கு தெரியப்படுத்தும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.


7. பங்குதாரர் / பதிலாள் பேரவைக் கூட்டத்தில் கலந்து கொள்ள வரும் போது இத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ள நுழைவுச் சீட்டை, பூர்த்தி செய்து கொண்டு வரவேண்டும்.

8. பங்குதாரர்கள் கூட்டத்திற்கு வருகை தரும் போது 51–ஆவது ஆண்டு அறிக்கையை எடுத்து வரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

9. பங்குதாரர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பங்குச் சான்றிதழ்களை வெவ்வேறு பதிவேட்டு எண்களில் பெற்றிருக்கும் பட்சத்தில் மேற்படி பதிவேட்டு எண்களை ஒருங்கிணைக்க விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

10. துவக்கக் காலத்தில் பல பங்குதாரர்கள் தங்களது முகவரியை முழுமையாக தரவில்லை. எனவே ஆண்டறிக்கை அவர்களுக்கு சரிவர சென்று அடைவதில்லை அல்லது காலதாமதமாக சென்று அடைகிறது. எனவே, அவ்வாறு முழுமையான முகவரி தராதவர்கள் கதவு எண், தெருவின் பெயர், கிராமத்தின் / ஊரின் பெயர், மாவட்டத்தின் பெயர், அஞ்சலக அடையாள எண், கைபேசி எண் உள்ளிட்ட முழுமையான முகவரியை பேரேட்டு எண்ணுடன் அஞ்சல் மூலம் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

11. நிகழ்ச்சி நடைபெறும் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கின் வரைப்படம்:



விளக்க அறிக்கை

(2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டம், பிரிவு 102–ன்படி)

இனம் எண்: 2

திரு. R. கண்ணன், இ.ஆ.ப., அவர்கள் தமிழ்நாடு அரசால் 29.05.2026 தேதியிட்ட பொது (சிறப்பு–அ) துறையின் அரசாணை (Rt) எண். 1883–ன் படி, திரு. T.அன்பழகன், இ.ஆ.ப., அவர்களுக்குப் பதிலாக தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநராக நியமனம் செய்யப்பட்டார். தமிழ்நாடு அரசாணை (Ms) எண்.02, தொழில் (எம்.ஐ.சி.2) துறை, நாள். 06.01.2022– ன் மூலம் தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தில் சில அதிகாரிகளை இயக்குநர்களாக நியமித்து ஒரு நிலையாணை பிறப்பிக்கப்பட்டது. மேற்கூறிய நிலையாணைப்படி, தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ஆக பதவியில் உள்ளவரை தமிழ்நாடு சர்க்கரை கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநராக நியமிக்கப்படுவார். 07.07.2026 அன்று நடைபெற்ற 238–வது இயக்குநர்கள் குழு கூட்டத்தில் இயக்குநராக நியமிக்கப்பட்ட திரு. R. கண்ணன், இ.ஆ.ப. அவர்கள் இந்நிறுவனத்தின் நலனுக்காக இவரை தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநராக நியமிப்பது அவசியம் என இயக்குநர்கள் குழு கருதுவதால், இவரை அவ்வாறு நியமனம் செய்வதற்கு பரிந்துரை செய்துள்ளது. இத்தீர்மானம் திரு. R. கண்ணன், இ.ஆ.ப.அவர்கள் சம்மந்தப்பட்டதால், இத்தீர்மானத்தில் அவருக்கு ஆர்வமுண்டு.

இத்தீர்மானத்தில், வேறு எந்த இயக்குநர்களுக்கும், முக்கிய அதிகாரிகளுக்கும் ஆர்வம் இல்லை.

இனம் எண்: 3

Dr.K.V.முரளிதரன், இ.ஆ.ப, அவர்கள் வேளாண்மை இயக்குநராக தமிழ்நாடு அரசால் 15.05.2026 தேதியிட்ட பொது (சிறப்பு–அ) துறையின் அரசாணை (Rt) எண். 1739–ன் படி, திரு. B. முருகேசன், இ.ஆ.ப., அவர்களுக்குப் பதிலாக நியமனம் செய்யப்பட்டார். தமிழ்நாடு அரசாணை (Ms) எண்.181, வேளாண்மை–உழவர் நலத்(க3) துறை, நாள். 11.08.2023–ன் மூலம் அத்துறையின் வேளாண்மை ஆணையர் / வேளாண்மை இயக்குநர் அவர்களை இயக்குநர்களாக நியமித்து ஒரு நிலையாணை பிறப்பிக்கப்பட்டது. மேற்கூறிய நிலையாணைப்படி, வேளாண்மை இயக்குநர் பதவியில் உள்ள வரை தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் இயக்குநராக நியமிக்கப்படுவார். 07.07.2026 அன்று நடைபெற்ற 238–வது இயக்குநர்கள் குழு கூட்டத்தில் இயக்குநராக நியமிக்கப்பட்ட Dr.K.V.முரளிதரன், இ.ஆ.ப அவர்கள் இந்நிறுவனத்தின் நலனுக்காக இவரை இயக்குநராக நியமிப்பது அவசியம் என இயக்குநர்கள் குழு கருதுவதால், இவரை அவ்வாறு நியமனம் செய்வதற்கு பரிந்துரை செய்துள்ளது. இத்தீர்மானம் Dr.K.V.முரளிதரன், இ.ஆ.ப அவர்கள் சம்மந்தப்பட்டதால், இத்தீர்மானத்தில் அவருக்கு ஆர்வமுண்டு.

இத்தீர்மானத்தில், வேறு எந்த இயக்குநருக்கும், முக்கிய அதிகாரிகளுக்கும் ஆர்வம் இல்லை.

இனம் எண்: 4

திருமதி.R.ரேவதி,இ.ஆ.ப., அவர்கள் தமிழ்நாடு அரசால் 29.05.2026 தேதியிட்ட பொது (சிறப்பு–அ) துறையின் அரசாணை (Rt) எண்.1883–ன்படி, திருமதி.B.பிரியங்கா, இ.ஆ.ப., அவர்களுக்குப் பதிலாக தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியராக நியமனம் செய்யப்பட்டார். தமிழ்நாடு அரசாணை (Ms) எண்.02, தொழில் (எம்.ஐ.சி.2) துறை, நாள்.06.01.2022–ன் மூலம் தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தில் சில அதிகாரிகளை இயக்குநர்களாக நியமித்து ஒரு நிலையாணை பிறப்பிக்கப்பட்டது. மேற்கூறிய நிலையாணைப்படி, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியராக நியமிக்கப்படுபவர், தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் இயக்குநராக நியமிக்கப்படுவார். 07.07.2026 அன்று நடைபெற்ற 238–வது இயக்குநர்கள் குழு கூட்டத்தில் இயக்குநராக நியமிக்கப்பட்ட திருமதி. R. ரேவதி, இ.ஆ.ப., அவர்கள் இந்நிறுவனத்தின் நலனுக்காக இவரை இயக்குநராக நியமிப்பது அவசியம் என இயக்குநர்கள் குழு கருதுவதால், இவரை அவ்வாறு நியமனம் செய்வதற்கு பரிந்துரை செய்துள்ளது. இத்தீர்மானம் திருமதி. R.ரேவதி, இ.ஆ.ப., அவர்கள் சம்மந்தப்பட்டதால், இத்தீர்மானத்தில் அவருக்கு ஆர்வமுண்டு.

இத்தீர்மானத்தில், வேறு எந்த இயக்குநருக்கும், முக்கிய அதிகாரிகளுக்கும் ஆர்வம் இல்லை.

// இயக்குநர்கள் குழுவின் ஆணைப்படி //

இடம் : சென்னை
நாள் : 19.08.2026

R. **கண்ணன். இ.ஆ.ப**
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்

தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் (வரை)
இயக்குநர்களின் அறிக்கை

பெறுநர்

பங்குதாரர்கள்
தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் (வரை)

அன்புடையீர்,

உங்கள் இயக்குநர்கள் இந்நிறுவனத்தின் 51–ஆம் ஆண்டு அறிக்கையையும் அத்துடன் 31.3.2026– ஆம் தேதிப்படியான தனி ஐந்தொகைக் குறிப்பு, 31.3.2026 அன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான தனி இலாப நட்டக் கணக்கு, 31.3.2026–ஆம் தேதிப்படியான ஒருங்கிணைக்கப்பட்ட ஐந்தொகை லாப நட்டக்கணக்கு, 31.3.2026 அன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான ஒருங்கிணைக்கப்பட்ட ஐந்தொகை இலாப நட்டக் கணக்கு மற்றும் அவற்றின் மீதான தணிக்கையாளர்களின் அறிக்கைகள் ஆகியவற்றை சமர்ப்பிக்கிறார்கள்.

1. ஆலையின் செயல்திறன்:

இந்நிறுவனத்தின் அலகு ஆலையான அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையின் 2025–26–ஆம் ஆண்டின் செயல்திறன் 2024–25–ஆம் ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

வ. எண்	விவரங்கள்	2025–2026	2024–2025
1.	கரும்பு அரைத்தது (மெ.டன்)	1,29,022	1,25,932
2.	சர்க்கரை உற்பத்தி (குவிண்டால்)	1,03,155	96,906
3.	அரவைத் திறன் பயனீட்டளவு (சதவீதம்)	30.01	29.29
4.	சராசரி சர்க்கரைச் சத்து (சதவீதம்)	9.83	9.49
5.	சர்க்கரை கட்டுமானம் (சதவீதம்)	8.00	7.70
6.	மொத்த இழப்பு (சதவீதம்)	1.85	1.81

2. **அ). நிதிப் பலன்கள்:**

31.3.2026–ஆம் தேதியுடன் முடிவடைந்த காலத்திற்கான நிறுவனத்தின் நிதிப்பயன்பாடு 31.3.2025–ஆம் தேதியுடன் ஒப்பிடுகையில் கீழ்க்கண்டவாறு உள்ளன.

(ரூபாய் இலட்சங்களில்)

வ.எண்.	விவரங்கள்	31/3/2026	31/3/2025
i.	இயக்கம் மூலம் வருவாய்	6,707.86	7,369.57
ii.	இதர வரவினங்கள்	356.11	85.30
iii.	மொத்த வரவு	7,063.97	7,454.88
iv.	கழிக்க: விற்பனைச் செலவினம்	7,579.74	9,035.16
v.	வட்டி மற்றும் தேய்மானத்திற்கு முன் ஈட்டிய வருவாய்	(-)515.77	(-)1,580.28
vi.	வட்டி	2,191.59	2,121.92
vii.	தேய்மானத்திற்கு முன் இலாபம் / நட்டம்	(-)2,707.36	(-)3,702.20
viii.	தேய்மானம்	38.88	43.75
ix.	நடப்பாண்டில் இலாபம் / நட்டம்	(-)2,746.24	(-)3,745.95

வ. எண்.	விவரங்கள்	31/3/2026	31/3/2025
x.	முந்தைய ஆண்டுக்கு சரிசெய்யப்பட்டது (வருமான வரிக்கான ஒதுக்கீட்டை திரும்பப் பெற்றது உள்ளிட்டது) (நிகரம்)	66.95	41.28
xi.	முந்தைய ஆண்டுக்கு சரிசெய்யப்பட்ட பின்னர் இலாபம்/ நட்டம்	(–)2,813.19	(–)3,787.23
xii.	முந்தைய ஆண்டிலிருந்து கொணரப்பட்ட திரண்ட நட்டம்	(–)32,511.91	(–)28,724.68
xiii.	ஐந்தொகைக் குறிப்பிற்கு எடுத்துச் செல்லப்பட்ட திரண்ட நட்டம்	(–)35,325.10	**(–)32,511.91**

2 ஆ). அலகு வாரியான இலாபம்:

நிதியாண்டு 2025–26 மற்றும் 2024–25–ல் அலகு வாரியாக ஏற்பட்ட இலாபம் / நட்டம் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(ரூபாய் இலட்சங்களில்)

அலகுகள்	2025–26 ஆண்டுக்கான இலாபம் / நட்டம்	2024–25 ஆண்டுக்கான இலாபம் / நட்டம்
1. தலைமை அலுவலகம்	(–) 182.98	(–) 136.55
2. அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை	(–) 2,394.87	(–) 3,645.55
மொத்தம்	(–) 2,577.85	(–) 3,783.10
செயலற்று இருக்கும் பிற அலகுகள்		
3. மதுரை சர்க்கரை ஆலை	(–) 263.26	(–) 4.12
4. சர்க்கரை இயந்திர தொழிற்கூடம்	27.92	–
மொத்தம்	(–) 235.34	(–) 4.12

3. நிகர சொத்து மதிப்பு:

31.3.2026–ஆம் தேதிப்படி நிறுவனத்தின் நிகர மதிப்பு ரூ. (–) 13,500.74 இலட்சங்களாகும்.

4. அக நிதிவள உருவாக்கம்:

மார்ச் 31 உடன் முடிவடைந்த மூன்று ஆண்டுகளில் நிறுவனத்தின் அக நிதிவள உருவாக்கம் பற்றிய விவரங்கள் பின்வருமாறு:

(ரூபாய் இலட்சங்களில்)

விவரங்கள்	ஆண்டுகள்		
	31–3–2026 முடிய	**31–3–2025 முடிய**	**31–3–2024 முடிய**
அ. இலாபம் / நட்டம்	(–) 2,813.19	(–) 3,787.23	(–) 3,595.94
ஆ. தேய்மானம்	38.88	43.75	40.93
இ. ரொக்க இழப்பு (அ–ஆ)	(–) 2,774.31	(–) 3,743.48	(–) 3,555.01

5. **பங்கு ஆதாயத் தொகை**

இந்நிறுவனனத்தின் நிதிநிலை திரண்ட நட்டமாக இருப்பதன் காரணமாக இந்த ஆண்டிற்கு எவ்வித பங்கு ஆதாயத் தொகையும் உங்கள் இயக்குநர்கள் சிபாரிசு செய்ய இயலாத நிலையில் உள்ளனர் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

6. **கோரப்படாத பங்கு ஆதாயத் தொகையை முதலீட்டாளர்களின் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதிக்கு மாற்றம் செய்தல்:**

இந்நிறுவனம் கடந்த ஆண்டுகளில் பங்கு ஆதாயத் தொகை எதுவும் அறிவிக்கவோ அல்லது வழங்கவோ இல்லை. எனவே 2013–ஆம் ஆண்டு நிறுவனங்களின் சட்டம் பிரிவு 125(2), இந்நிறுவனத்திற்கு பொருந்தாது.

7. **நிதி ஆண்டில் நிறுவனத்தை பாதிக்கும் பொருள் மாற்றங்கள்**

தணிக்கை ஆண்டில் நிறுவனத்தில் குறிப்பிடத்தக்க பொருள் மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை.

8. **மதுரை சர்க்கரை ஆலை:**

மதுரை சர்க்கரை ஆலையை இயக்குவதற்கான சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை. எனவே அந்நிறுவனத்தின் நிலத்தை விற்பதற்கான பிரேரணையை அரசிற்கு அனுப்பியிருந்தது. அதற்கு, தமிழ் நாடு அரசின் கடித எண்.3999/ எம்ஐசி.1/2012–1, நாள்.10.5.2018–ன்படி நிறுவனத்துடைய கோரிக்கை நிறுத்தி வைத்துள்ளது. இது சம்பந்தமான நடவடிக்கைகள் அரசின் இறுதி முடிவை பொறுத்து அமையும்.

9. **நிறுவனத்தின் சமூக பொறுப்புகள்:**

இந்நிறுவனத்தின் இயக்குநர்களின் குழுவானது நிறுவனத்தின் சமூக பொறுப்புகளுக்கான குழு ஒன்றினை அமைத்துள்ளது. ஆயினும், நிறுவனம் தொடர்ந்துநட்டத்தில் இயங்கிவருவதால் தணிக்கை ஆண்டில் நிறுவனத்தின் சமூக பொறுப்புகளை நிறைவேற்றுவது தொடர்பான நடவடிக்கை ஏதும் செய்ய இயலவில்லை.

10. **கடன்கள், பொறுப்புறுதிகள் அல்லது முதலீடுகள் பற்றிய விவரங்கள்:**

தணிக்கையாண்டில் 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டம் பிரிவு 186–ல் குறிப்பிட்டவாறு கடன்கள், பொறுப்புறுதிகள் அல்லது முதலீடுகள் ஆகிய எதுவும் செய்யப்படவில்லை

11. **நிறுவனத்துடன் தொடர்புடைய நபர்களுடன் ஏற்படுத்தி கொள்ளப்பட்ட குறிப்பிட்ட ஒப்பந்தங்கள் அல்லது வகைப்படுத்துதல்கள் ஆகியவற்றின் விவரங்கள்:**

இத்தணிக்கையாண்டில் 2013–ஆம் ஆண்டு நிறுவனச்சட்டம் பிரிவு188–ல் வரையறுத்தவாறு ஒப்பந்தங்கள் அல்லது வகைப்படுத்துதல்கள் எதுவும் தொடர்புடைய நபர்களுடன் செய்யப்படவில்லை.

12. **தொழில்முறை நிறுவனச்செயலரின் தணிக்கை:**

2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டம் பிரிவு 204(1)–ன்படி இந்நிறுவனத்தில் தொழில்முறை நிறுவனச்செயலரின் தணிக்கைப் பணி மேற்கொள்ளப்பட்டது. அதனடிப்படையில் தொழில்முறை நிறுமச்செயலரின் தணிக்கை அறிக்கை இந்த அறிக்கையின் இணைப்பாக கொடுக்கப்பட்டுள்ளது.

13. **சட்டபூர்வ தணிக்கையாளர்கள் மற்றும் தொழில்முறை நிறுமச் செயலர் ஆகியோரின் கருத்துரைகளுக்கு விளக்கம்:**

தணிக்கையாளர்களின் நிறுவனத்தை பற்றிய கருத்துரைகள் மீதான நிறுவனத்தின் விளக்கக் குறிப்புகள் இந்த அறிக்கையின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. தொழில்முறை நிறுமச் செயலர் தமது அறிக்கையில் தகுதியுடைய கருத்துகள் எதுவும் கூறவில்லை.

14. **ஆண்டறிக்கையின் சுருக்கமான சாராம்சம்:**

நிறுவனங்களின் சட்ட பிரிவு 92–ல் கூறப்பட்டதன் படியும், 2014–ஆம் ஆண்டு (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதி எண் 12–ன் படியும், ஆண்டறிக்கையின் சுருக்கமான சாராம்சம் (படிவம் MGT–9) இந்த அறிக்கையில் தனியாக இணைக்கப்பட்டுள்ளது.

15. நடத்தப்பட்ட இயக்குநர்கள் குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை:

இந்த நிதியாண்டில் நான்கு முறை அதாவது 04.06.2025, 21.08.2025, 17.12.2025 மற்றும் 10.03.2026 தேதிகளில் இயக்குநர்கள் குழுக்கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

16. துணை நிறுவனத்தின் செயல்பாடுகள் (பெரம்பலூர் சர்க்கரை ஆலை (வரை):

பெரம்பலூர் சர்க்கரை ஆலை எனும் துணை நிறுவனத்தை, பெரம்பலூர் மாவட்டம் எறையூரில் இந்நிறுவனம் நிர்வகித்து வருகிறது. இந்த ஆலையின் நிறுவப்பட்ட அரவைத் திறன் நாளொன்றுக்கு 3,000 டன்கள் ஆகும். இந்த ஆலை 2025–2026–ஆம் நிதி ஆண்டில் 9.11 சதவீத சராசரி சர்க்கரை கட்டுமானத்துடன் 1,17,538 மெட்ரிக் டன்கள் கரும்பை அரைத்துள்ளது. இது சென்ற ஆண்டில் (2024–2025) 8.54 சதவீத சராசரி சர்க்கரை கட்டுமானத்துடன் 1,64,975 மெட்ரிக் டன்கள் கரும்பை அரைத்துள்ளது. தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளின்படி, துணை நிறுவனத்தின் இந்த ஆண்டு இழப்பு ரூ. (–) 2,360.10 லட்சங்கள் ஆகும். முந்தைய ஆண்டு இழப்பு ரூ. (–) 2,859.25 இலட்சங்கள் ஆகும். 31.3.2026–ஆம் தேதிப்படி திரண்ட நட்டம் ரூ. (–) 38,223.60 இலட்சங்களாகும். கடன்களை பங்குமூலதன உதவியாக மாற்றம் செய்த தேதிக்குப் பிறகு அந்த தேதியில் நிகர மதிப்பு ரூ. (–) 17,312.81 இலட்சங்களாக இருந்தது.

17. தணிக்கை அறிக்கைகள்:

(i) **சட்டரீதியான தணிக்கை**

இந்திய தலைமை கணக்காய்வு மற்றும் தணிக்கைத் தலைவர் அவர்களால் திருவாளர்கள். இராதாகிருஷ்ணன் & அசோசியேட்ஸ், சென்னை, அவர்களை இந்நிறுவனத்தின் சட்டரீதியான தணிக்கையாளர்களாக இந்த ஆண்டிற்காக நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். தணிக்கையாளர்களின் அறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. தணிக்கையாளர்களின் அறிக்கைக்கு இயக்குநர்களின் பதில் பின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

(ii) **அடக்கவிலைத் தணிக்கை**

2013–ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டப்படி அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையின் 2025–2026–ஆம் ஆண்டுக்குரிய அடக்கவிலை ஆவணங்களை தணிக்கை செய்ய திருவாளர்கள் ஆரிப் & கோ திருச்சி, அடக்கவிலைத் தணிக்கையாளர் அவர்களை, அடக்கவிலைத் தணிக்கையாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். அடக்கவிலைத் தணிக்கையாளர், அடக்கவிலை தணிக்கை செய்து முடித்த பின், தனதுஅறிக்கையை இந்திய அரசுக்கு சமர்ப்பிப்பார்.

(iii) **இந்திய தலைமை கணக்காய்வு மற்றும் தணிக்கைத் தலைவரின் தணிக்கை**

2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டப்படி நிறுவனத்தின் கணக்குகளை இந்திய தலைமை கணக்காய்வு மற்றும் தணிக்கைத் தலைவர், சோதனை/துணைத் தணிக்கை செய்துள்ளார்கள். இந்திய அரசின் முதன்மை தணிக்கை துறைத் தலைவரின் அறிக்கை ஆண்டறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது.

18. ஊழியர்களைப் பற்றிய விவரங்கள்:

2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டப்படி, நிறுவனத்தின் எந்த ஒரு ஊழியரும் வரையறுக்கப்பட்ட வரம்புக்கு அதிகமாக ஊதியம் பெறவில்லை. எனவே, இதற்கான விளக்கம் ஏதும் இணைக்கப்பட வேண்டும் என்ற அவசியம் எழவில்லை.

19. எரிசக்தி சேமிப்பு பற்றிய விவரங்கள்:

2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டம், பிரிவு 134 (3) (அ)–ன்படி உடன் படிக்கப்பட்ட நிறுவனங்கள் (கணக்குகள்) விதி 2014–ல் 8–ன்படி எரிசக்தி சேமிப்பு பற்றிய விவரங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

20. இயக்குநர்களின் பொறுப்புகள்:

2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டம், பிரிவு 134 (5)–க்கு இணங்க, இயக்குநர்கள் தெரிவிப்பது யாதெனில்:

(i) வருடாந்திரக் கணக்குகள் தயாரிக்கும்போது கணக்கீட்டு மரபுகள் பின்பற்றியதுடன் குறிப்பிடத்தக்க விலகல் இருப்பின் முறையான விளக்கமும் கொடுக்கப்பட்டுள்ளது.

(ii) நிதி ஆண்டு முடிவில் நிறுவனத்தின் நிலவரம் மற்றும் ஏற்பட்ட இழப்பு சம்பந்தமான அறிக்கை உண்மையானதாகவும், செம்மையானதாகவும் இருக்க இயக்குநர்கள் சரியான கணக்கீட்டு கோட்பாடுகளை தொடர்ச்சியாக செயல்படுத்தியதுடன் முக்கிய முடிவுகள் மற்றும் மதிப்பீடுகள் நியாயமானதாகவும், செயல்முறைக்கு ஒத்ததாகவும் இருந்தன.

(iii) 2013–ஆம் ஆண்டின் நிறுவனங்கள் சட்ட விதிகளுக்கிணங்க, நிறுவனத்தின் சொத்துக்களை பாதுகாக்கும் பொருட்டு, மோசடி மற்றும் முறைகேடுகளை கண்டுபிடிக்கவும், தவிர்க்கவும் தேவையான அளவில் கணக்கு ஆவணங்களை பராமரிப்பதில் முறையான மற்றும் போதுமான அளவில் இயக்குநர்களின் கவனம் செலுத்தப்பட்டது.

(iv) தொடரும் நிறுவனங்களின் கோட்பாட்டின்படி, நிறுவனத்தின் ஆண்டுக் கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

(v) இயக்குநர்கள் முறையான உள்நிதி கட்டுப்பாடு அமைப்பு இருப்பதாகவும், அதனை நிறுவனம் பின்பற்றும் எனவும், அந்த உள்நிதி கட்டுப்பாடு அமைப்பு போதுமானது எனவும் மற்றும் திறம்பட செயல்பட்டு வருகிறது என தெரிவித்தனர்.

(vi) இயக்குநர்கள் சம்பந்தப்பட்ட பல்வேறு சட்டங்களை நடைமுறைப்படுத்த தேவைப்படும் முறைகளை வகுத்துள்ளனர். அந்த முறைகள் போதுமானதாக உள்ளன.

21. சுதந்திரமான இயக்குநர்களின் அறிக்கை

சுதந்திரமான இயக்குநர்கள், அவர்களுடைய சுதந்திரமான அறிவிப்பு அறிக்கை படிவத்தை இயக்குநர்கள் குழுவிற்கு சமர்ப்பித்துள்ளனர்.

22. **போதுமான அக கட்டுப்பாடு அமைப்பு:**

தற்போது பின்பற்றப்பட்டு வரும் அகக்கட்டுப்பாடு அமைப்பு நீண்ட காலமாக பின்பற்றப்பட்டு வருகின்றது. கரும்பு மேலாண்மைக்காக மேம்படுத்தப்பட்ட மென்பொருள் உறுதியான அக கட்டுப்பாடு அமைப்பை நிர்வாகம் உருவாக்கி உள்ளது. சட்டபூர்வ தணிக்கையாளர்களின் தகுதிகள் தணிக்கைக் குழு கூட்டத்திலும் ஒரு பயனுள்ள அகக்கட்டுப்பாட்டு அமைப்பைக் கொண்டு வர விரிவாக விவாதிக்கப்பட்டன.

23. **இயக்குநர்களின் மாற்றங்கள்:**

தமிழ்நாடு அரசின் ஆணைப்படி ஏற்பட்ட அலுவலர் பணியிட மாற்றங்களின் விளைவாக இயக்குநர்கள் குழுவில் கீழ்க்கண்ட மாற்றங்கள் ஏற்பட்டன:

1. திரு. R. கண்ணன், இ.ஆ.ப. அவர்கள் இந்நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநராக திரு. T.அன்பழகன், இ.ஆ.ப என்பவருக்கு பதிலாக நியமிக்கப்பட்டார்.

2. Dr.K.V. முரளிதரன், இ.ஆ.ப., வேளாண்மை ஆணையர் அவர்கள் இந்நிறுவனத்தின் இயக்குநராக திரு. B. முருகேசன், இ.ஆ.ப, என்பவருக்கு பதிலாக நியமிக்கப்பட்டார்.

3. திருமதி. R. ரேவதி, இஆ.ப., தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் இந்நிறுவனத்தின் இயக்குநராக திருமதி. B.பிரியங்கா,இ.ஆ.ப., என்பவருக்கு பதிலாக நியமிக்கப்பட்டார்.

திரு. T.அன்பழகன், இ.ஆ.ப திரு. B.முருகேசன், இ.ஆ.ப, திருமதி. B.பிரியங்கா, இ.ஆ.ப., Dr.R. கருப்பையன் மற்றும் திரு. S. மங்களநாதன் ஆகியோர் சிறந்த சேவை புரிந்தமைக்காக இயக்குநர்கள் தங்களது மனமார்ந்த பாராட்டுதல்களைப் பதிவு செய்ய விரும்புகிறார்கள்.

24. பணியிடத்தில் பெண்கள் பாலியில் துன்புறுத்தலுக்கு உட்படுத்தல் (தடுப்பு தடை மற்றும் நிவாரணம்) சட்டம் 2013

நிறுவனத்தில் மேற்கூறிய சட்ட விதிகள் கடைபிடிக்கப்படுகின்றது. இதுவரை எந்த புகாரும் இல்லை

25. விழிப்புணர்வு இயக்கம்

நிறுவனத்தின் உள்கட்டுப்பாடு மற்றும் தர நிலை மூலம் விழிப்புணர்வு இயக்கம் செயல்படுத்தப்படுகிறது.

26. பொதுமக்களிடமிருந்து பெற்ற வைப்பு நிதி

இந்நிறுவனம் பொதுமக்களிடமிருந்து வைப்பு நிதி ஏதும் பெறவில்லை.

27. செயலக தரங்களை கையாளுதல்

இந்நிறுவனத்தின் இயக்குநர்கள் செயலகத்தரங்களை கையாளுவதற்கு சரியான அமைப்பினை உருவாக்கியுள்ளனர்.

28. நன்றி தெரிவித்தல்

இந்த ஆண்டில் நிறுவனத்தின் விவகாரங்களை நிர்வகிப்பதில் தொடர்ந்து ஆதரவு மற்றும் உதவி அளித்த தமிழக அரசு மற்றும் ஒழுங்குமுறை அதிகாரிகளுக்கு உங்கள் இயக்குநர்கள் தங்கள் மனமார்ந்த நன்றியை பதிவு செய்ய விரும்புகிறார்கள்.

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, குருங்குளம் மற்றும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, தஞ்சாவூர் ஆகியவை நிறுவனத்திற்கு அளித்த ஆதரவு மற்றும் ஒத்துழைப்புக்காக உங்கள் இயக்குநர்கள் நன்றி தெரிவித்துக்கொள்கிறார்கள்.

நிறுவனத்தின் வணிகத்தை நடத்துவதற்கு, வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர், வேளாண்மை–உழவர் நலத் துறை, சர்க்கரைத் துறை மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையம், சென்னை ஆகியவற்றின் ஆதரவையும் உங்கள் இயக்குநர்கள் பாராட்டி நன்றி தெரிவிக்கிறார்கள்.

கரும்பு விவசாயிகள் மற்றும் பங்குதாரர்களின் நிறுவனத்தை சுமூகமாக நடத்துவதற்கு அவர்களின் ஒத்துழைப்புக்காக நன்றி மற்றும் வரும் ஆண்டுகளில் அவர்களின் தொடர்ச்சியான ஒத்துழைப்பை உங்கள் இயக்குனர்கள் கோருகிறார்கள்.

உங்கள் இயக்குநர்கள் நிறுவனத்தின் வளர்ச்சிக்காக உழைத்த அனைத்து மட்டங்களிலும் உள்ள பல்வேறு பிரிவு அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் ஊழியர்களின் அர்ப்பணிப்பையும் வெகுவாக பாராட்டுகிறார்கள். நிறுவனத்தின் செயல்திறனை மேலும் மேம்படுத்த அதிக ஒத்துழைப்பு மற்றும் கடின உழைப்பை கோருகிறார்கள்.

// இயக்குநர்கள் குழுவின் ஆணைப்படி //

இடம் : சென்னை

நாள் : 19.08.2026

R. **கண்ணன். இ.ஆ.ப**

தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்

தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் (வரை)

இணைப்பு – 1

படிவம் – அ (விதி 2–ஐப் பார்க்க)
எரிசக்தி சேமிப்பு தொடர்பான விவரங்கள் அடங்கிய படிவம்

வ. எண்	விவரம்	அளவீடுகளின் அலகுகள்	நடப்பு ஆண்டு 2025–2026	நடப்பு ஆண்டு 2024–2025
A	**ஆற்றல் மற்றும் எரிபொருள் பயனீட்டளவு**			
1	**மின்சக்தி:**			
(a)	**வாங்கியது**			
	மின் அலகு	கிலோவாட் மணிக்கு	10,40,996	11,18,588
	மொத்த தொகை	ரூ. லட்சத்தில்	176.62	171.58
	அலகு ஒன்றுக்கு	ரூ.	16.96	15.33
(b)	**சுய உற்பத்தி**			
	(i) டீசல் மின்உற்பத்தி கருவி மூலம்	யூனிட்கள்	11,462	38381
	ஒரு லிட்டர் டீசலுக்கு மின் அலகு	கிலோவாட் மணிக்கு	39.07	33.94
	அடக்கவிலை அலகு ஒன்றுக்கு	ரூ.	2.38	2.94
	(ii) நீராவி மின் உற்பத்தி கருவி மூலம்			
	மின் அலகுகள்	கிலோவாட் மணிக்கு	1,23,27,000	1,29,99,300
	உபயோகித்த ஒரு டன் நீராவிக்கு மின் அலகுகள்		153.08	154.01
	அடக்கவிலை அலகு ஒன்றுக்கு	ரூ.	(சொந்த நீராவி உபயோகிக்கப்பட்டது)	(சொந்த நீராவி உபயோகிக்கப்பட்டது)
2	**நிலக்கரி (அளவு மற்றும் எங்கு உபயோகிக்கப்பட்ட தென குறிப்பிடவும்)**	யூனிட்கள்	இல்லை	இல்லை
3	**எரி எண்ணெய்**			
	அளவு	கிலோ லிட்டர்	இல்லை	இல்லை
	மொத்த தொகை	ரூ. லட்சத்தில்	இல்லை	இல்லை
	சராசரி விலை	ரூ. கிலோ லிட்டர்	பொருந்தாது	பொருந்தாது
4	**மற்ற / உள் உற்பத்தி**		இல்லை	இல்லை
B	**ஒரு குவிண்டால் சர்க்கரை உற்பத்திக்கு சக்தி பயனீட்டளவு**			
1	உற்பத்தி பொருள் – சர்க்கரை	குவிண்டால்	1,03,153	96,906
2	மின்சக்தி	கிலோவாட் மணிக்கு	32.74	35.23
3	எரி எண்ணெய்	லிட்டர்	இல்லை	இல்லை
4	நிலக்கரி (அளவை குறிப்பிடவும்)	மெ.டன்	500	500
5	மற்றவை	–	இல்லை	இல்லை

இ. எரிசக்தி சேமிப்பு நடவடிக்கைகள்

(அ) எரிசக்தி சேமிப்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்

- இல்லை -

(ஆ) நீராவி மற்றும் சக்தி குறைப்பு நடவடிக்கைகளுக்காக கூடுதல் முதலீடுகள் / செயற்குறிப்புகள்

– இல்லை –

(இ) மேற்கண்ட (அ) மற்றும் (ஆ)–ன்படி சக்தி குறைப்பு நடவடிக்கையின் விளைவும், அதைத் தொடர்ந்து உற்பத்தி பொருட்களின் கொள்முதல் விலை மீதான விளைவும்

– இல்லை -

ஈ. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி

இந்நிறுவனத்திற்கென சொந்தமாக தனியே ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவு ஏதும் இல்லை. எனினும் தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையத்தால் அமைக்கப் பெற்ற உயிரியல் கட்டுப்பாடு பரிசோதனைச் சாலை மற்றும் தென்னிந்திய சர்க்கரை ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆராய்ச்சிப் பிரிவு ஆகியவற்றால் கண்டுபிடிக்கப்படும் ஆராய்ச்சி முடிவுகளை இந்நிறுவனம் பயன்படுத்திக் கொள்கிறது. தற்போது மேற்படி நிறுவனங்கள் உயிரியல் உரம் மற்றும் இயந்திரங்கள் தொடர்பான ஆராய்ச்சியில் ஈடுப்பட்டுள்ளது.

உ. தொழில் நுட்பவியல், ஏற்றல் மற்றும் செயல்படுத்துதல்.

- இல்லை -

ஊ. அந்நிய செலாவணி ஈட்டுதல் மற்றும் செலவுகள்.

- இல்லை -

படிவம் எண். MGT 9

வருடாந்திர அறிக்கையின் சுருக்கம்
31.3.2026 தேதியுடன் முடிவடைந்த நிதி ஆண்டு

2013–ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டம் விதி 92 (3) மற்றும் 2014–ஆம் ஆண்டு நிறுமங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதி 12(1)–ன்படி அளிக்க வேண்டியது

i. பதிவு மற்றும் இதர தகவல்கள்

1.	நிறும எண்	யூ15421டிஎன்1974எஸ்ஜிசி006753
2.	பதிவு செய்யப்பட்ட நாள்	17.10.1974
3.	நிறுமத்தின் பெயர்	தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் (வரை)
4.	நிறுமத்தின் வகை	அரசு நிறுவனம்–பங்கு மூலதனம் மூலம் வரையறுக்கப்பட்டது.
5.	பதிவு அலுவலக முகவரி	ஆவின் இல்லம், 2வது தளம், 3A, பசும்பொன் முத்துராமலிங்கனார் சாலை, நந்தனம், சென்னை – 600 035, தமிழ்நாடு, இந்தியா.
6.	பட்டியலிடப்பட்ட நிறுமமா ?	இல்லை.
7.	பதிவுதாரர் மற்றும் பங்கு மாற்றம் ஏஜெண்ட்	பொருந்தாது.

ii. நிறுமத்தின் முக்கிய வியாபார நடவடிக்கைகள்

(அனைத்து வியாபார நடவடிக்கையின் மொத்த விற்று வரவில் 10 சதவீதம் அல்லது அதற்கு மேல் உள்ள வியாபார நடவடிக்கைகள் குறிப்பிடவும்)

வ. எண்	முக்கியப் பொருள்களின் பெயர்	பொருள்களின் NIC கோடு எண்	மொத்த விற்று வரவில் சதவீதம்
1.	சர்க்கரை	10721	69 %
2.	கழிவுப்பாகு	10728	18 %

iii. உடைமை / துணை / இணை நிறுமத்தின் விபரம் :

வ. எண்	நிறுமத்தின் பெயர் மற்றும் முகவரி	CIN/ GLN எண்	உடைமை / துணை / இணை	பங்கு சதவீதம்	உட்படும் பிரிவு
1.	பெரம்பலூர் சர்க்கரை ஆலை (வ)	யூ15520டிஎன்1976எஸ்ஜிசி007172	துணை	94.98%	பிரிவு 2(87)

IV. பங்கு வைத்திருக்கும் முறைகள் (பங்கு வைத்திருக்கும் வகைப்படி மொத்த சம பங்குகளில் மூலதன சம பங்குகளின் விகிதாச்சார புள்ளி விபரம்)

பிரிவு	ஆண்டு துவக்கத்தில் உள்ள பங்குகள் எண்ணிக்கை (31.3.2025 தேதிப்படி)				ஆண்டு இறுதியில் உள்ள பங்குகள் எண்ணிக்கை (31.3.2026 தேதிப்படி)				நடப்பு ஆண்டின் மாற்றம்
	டிமேட் பங்குகள்	பங்கு சான்றிதழ் பங்குகள்	மொத்தம்	மொத்த பங்குகள் %	டிமேட் பங்குகள்	பங்கு சான்றிதழ் பங்குகள்	மொத்தம்	மொத்த பங்குகள் %	
அ நிறுவனர்									
(1) இந்தியர்									
i) தனிமனிதன் /கூட்டுக் குடும்பம்	–	–	–	–	–	–	–	–	–
ii) மத்திய அரசு	–	–	–	–	–	–	–	–	–
iii) மாநில அரசுகள்	–	217242633	217242633	99.5413	–	217242633	217242633	99.5413	–
iv) வியாபார நிறுவனங்கள்	–	–	–	–	–	–	–	–	–
v) வங்கிகள்/நிதி நிறுவனங்கள்	–	–	–	–	–	–	–	–	–
vi) மற்றவர்கள்(அரசு நியமனம்)	–	1,006	1,006	0.0001	–	1,006	1,006	0.0001	–
நிறுவனரின் மொத்த பங்குகள்	–	217243639	217243639	99.5414	–	217243639	217243639	99.5414	–
ஆ. பொதுமக்கள் பங்குகள்									
1). நிறுவனங்கள்									
i). சகாய நிதிகள்	–	–	–	–	–	–	–	–	–
ii). வங்கிகள்/நிதி நிறுவனங்கள்	–	–	–	–	–	–	–	–	–
iii). மத்திய அரசு	–	–	–	–	–	–	–	–	–
iv). மாநில அரசு	–	–	–	–	–	–	–	–	–
v). Venture முதலீடு	–	–	–	–	–	–	–	–	–
vi). காப்பீட்டு நிறுவனங்கள்	–	–	–	–	–	–	–	–	–
vii). நிதி நிறுவனங்கள்	–	–	–	–	–	–	–	–	–
viii). அயல்நாட்டின் Venture முதலீடுகள்	–	–	–	–	–	–	–	–	–
ix). மற்றவை (குறிப்பிடவும்)	–	–	–	–	–	–	–	–	–
உள் கூட்டல்	–	–	–	–	–	–	–	–	–

2). நிறுவனங்கள் அல்லாதவைகள்									
அ) வர்த்தக நிறுவனங்கள்									
(i) இந்தியர்	–	–	–	–	–	–	–	–	–
(ii) அயல்நாட்டினர்	–	–	–	–	–	–	–	–	–
ஆ) தனி மனிதர்கள்	–	1000000	1000000	0.4586	–	1000000	1000000	0.4586	–
(i) ஒரு லட்சத்திற்குள் பங்குகள் வைத்திருப்பவர்கள்	–	–	–	–	–	–	–	–	–
(ii) 1 லட்சத்திற்கு மேல் பங்குகள் வைத்திருப்பவர்கள்	–	–	–	–	–	–	–	–	–
(iii) மற்றவர்கள்	–	–	–	–	–	–	–	–	–
	–	–	–	–	–	–	–	–	–
அயல்நாட்டு இந்தியர்கள்	–	–	–	–	–	–	–	–	–
அயல்நாட்டு நிறுவனங்கள்	–	–	–	–	–	–	–	–	–
அயல்நாட்டினர்	–	–	–	–	–	–	–	–	–
பங்கு வர்த்தகர்கள்	–	–	–	–	–	–	–	–	–
டிரஸ்ட்கள்	–	–	–	–	–	–	–	–	–
வெளிநாட்டு நிறுவனங்கள்	–	–	–	–	–	–	–	–	–
மொத்தம் உள் கூட்டல்	–	1000000	1000000	0.4586		1000000	1000000	0.4586	–
மொத்த பொதுபங்குகள் ஆ = ஆ(1)+ஆ(2)	–	1000000	1000000	0.4586		1000000	1000000	0.4586	–
இ) GDRs.மற்றும்ADRs.க்கான பாதுக்காப்பாளர் பங்குகள்	–	–	–	–	–	–	–	–	–
மொத்த கூட்டுத் தொகை (அ)+(ஆ)+(இ)	–	218243639	218243639	100.00	–	218243639	218243639	100.00	

ஆ. நிறுவனரின் பங்கு முதலீடு

வ. எண்.	பங்குதாரர் பெயர்	ஆண்டு துவக்கத்தில் இருந்த பங்குகள்			ஆண்டு இறுதியில் உள்ள பங்குகள்			
		பங்குகள் எண்ணிக்கை	மொத்தத்தில் சதவீதம்	அடமானம் வைக்கப்பட்ட பங்குகள் %	பங்குகள் எண்ணிக்கை	மொத்தத்தில் சதவீதம்	அடமானம் வைக்கப்பட்ட பங்குகள் %	வருடத்தில் பங்குகளில் சதவீதம் மாற்றம்
1.	அரசு நிறுவனம் – தமிழ்நாடு சர்க்கரைக் கழகம்	217242633	99.5413	–	217242633	99.5413	–	–
2.	அரசு நியமன அதிகாரிகள்	1,006	0.0001	–	1,006	0.0001	–	–
	மொத்தம்	217243639	99.5414	–	217243639	99.5414	–	–

இ. நிறுவனரின் பங்கு முதலீட்டின் மாற்றத்தை குறிப்பிடவும்

வ. எண்.	விபரம்	ஆண்டு துவக்கத்தில் இருந்த பங்குகள்		ஆண்டு இறுதியில் உள்ள பங்குகள்	
		பங்குகள் எண்ணிக்கை	மொத்த பங்கில் %	பங்குகள் எண்ணிக்கை	மொத்த பங்கில் %
1	ஆண்டு துவக்கத்தில்	217242633	99.5413	217242633	99.5413
2	பங்குகளின் உயர்வு/ குறைவு (காரணத்துடன்)	–	–	–	–
3	ஆண்டு இறுதியில்	217242633	99.5413	217242633	99.5413

ஈ. அதிக பங்குகள் வைத்திருக்கும் முதல் 10 நபர்கள் (தொழில் முனைவோர், இயக்குநர்கள் தவிர்த்து)

வ. எண்.	முதல் 10 நபர்கள்	ஆண்டு துவக்கத்தில் இருந்த பங்குகள்		ஆண்டு இறுதியில் உள்ள பங்குகள்	
		பங்குகள் எண்ணிக்கை	மொத்த பங்கில் %	பங்குகள் எண்ணிக்கை	மொத்த பங்கில் %
1	ஆண்டு துவக்கத்தில்	15,669	0.0004	15,669	0.0004
2	பங்குகளின் உயர்வு/ குறைவு (காரணத்துடன்)	–	–	–	–
3	ஆண்டு இறுதியில்	15,669	0.0004	15,669	0.0004

உ. இயக்குநர்கள் மற்றும் முக்கிய அதிகாரிகளின் பங்குகள்

வ. எண்.	இயக்குநர்கள் மற்றும் முக்கிய அதிகாரிகள்	ஆண்டு துவக்கத்தில் இருந்த பங்குகள்		ஆண்டு இறுதியில் உள்ள பங்குகள்	
		பங்குகள் எண்ணிக்கை	மொத்தம் %	பங்குகள் எண்ணிக்கை	மொத்தம் %
1	ஆண்டு துவக்கத்தில்	1,006	0.0005	1,006	0.00005
2	தேதிவாரியாக உயர்வு/ குறைவு (காரணங்களுடன்)	–	–	–	–
3	ஆண்டு இறுதியில்	1,006	0.0005	1,006	0.00005

V. கொடுக்க வேண்டிய கடன்கள்: நிலுவையில் உள்ள வட்டி, செலுத்தப்பட வேண்டிய தொகை உள்ளிட்டது.

(ரூ. இலட்சங்களில்)

	அடமானக் கடன்கள் (வைப்புத் தொகை தவிர)	ஈடற்ற கடன்கள்	வைப்பு நிதி	மொத்த கடன்கள்
நிதி ஆண்டு துவக்கத்தில் உள்ள கடன்கள்				
(i) அசல் தொகை	**16,041.90**	–	–	**16,041.90**
(ii) நிலுவையில் உள்ள செலுத்தப்படாத வட்டி	**7,257.80**	–	–	**7,257.80**
(iii) நிலுவையில் இல்லாத திரண்ட வட்டி		–	–	
மொத்தம் (i) + (ii) + (iii)	**23,299.70**	–	–	**23,299.70**
நடப்பு ஆண்டில் மாற்றம்				
கூடுதல்	**(+)1,113.65**	–	–	**(+)1,113.65**
குறைவு		–	–	
நிகர மாற்றம்		–	–	
ஆண்டு இறுதியில் உள்ள கடன்கள்				
(i) அசல் தொகை	**17,155.55**	–	–	**17,155.55**
(ii) நிலுவையில் உள்ள செலுத்தப்படாத வட்டி		–	–	
(iii) நிலுவையில் இல்லாத திரண்ட வட்டி	**9,355.47**	–	–	**9,355.47**
மொத்தம் (i) + (ii) + (iii)	**26,511.02**	–	–	**26,511.02**

VI. இயக்குநர்கள் மற்றும் முக்கிய அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட ஊதியம்

அ. மேலாண் இயக்குநர், முழுநேர இயக்குநர்கள் மற்றும் / (அ) மேலாளர்களுக்கு அளிக்கப்பட்ட ஊதியம்

வ. எண்.	ஊதிய விபரம்	முழு நேர இயக்குநர்கள் விபரம்	மொத்தம் ரூ.
		01.04.2025 முதல் 31.03.2026 வரை திரு.S.ராமன்	
1.	நிகர ஊதியம்	17,26,064.96	17,26,064.96
	(a) வருமான வரி சட்டம், 1961 பிரிவு 17(1)ன்படி	–	–
	(b) வருமான வரி சட்டம், 1961 பிரிவு 17(2)ன்படி சலுகைகளின் மதிப்பு	–	–
	(c) ஊதியத்திற்கு பதிலாக லாபத்தில் பங்கு வருமான வரி சட்டம், 1961 பிரிவு 17(3)ன்படி	–	–
2.	அளிக்கப்பட்ட பங்குகள்	–	–
3.	ஈடற்ற பங்குகள்	–	–
4.	தரகு	–	–
	இலாப சதவீதம்	–	–
	மற்றவை	–	–
5.	இதரவைகள்	–	–
	மொத்தம் (அ)		
	சட்டப்படி உச்சவரம்புத் தொகை	–	–

ஆ. மற்ற இயக்குநர்களுக்கு அளிக்கப்பட்ட ஊதியம்

(ரூ.)

வ. எண்.	ஊதிய விபரம்	இயக்குநர்கள் பெயர்	மொத்த தொகை
1.	1. சுதந்திரமான இயக்குநர்கள்	Dr. D. சசிகுமார்	––
	– கூட்டத்தில் கலந்துகொள்ள அளிக்கப்பட்ட தொகை	மேலே கூறப்பட்ட சுதந்திரமான இயக்குநர் அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அரசு துறைகளில் நிர்வாகிகளாக இருப்பதால், அவர்களுக்கு ஊதியம் வழங்கப்படவில்லை.	
	– தரகு		
	– மற்றவைகள்		
	மொத்தம் (1)		
2.	இதர முழுநேரம் அல்லாத இயக்குநர்கள்		
	– கூட்டத்தில் கலந்துகொள்ள அளிக்கப்பட்டதொகை		
	– தரகு		
	– மற்றவை		
	மொத்தம் (2)		
	இயக்குநர்களுக்கான மொத்த ஊதியம் (1) + (2)		
	சட்டப்படி உச்சவரம்புத் தொகை		

(இ) முக்கிய அதிகாரிகளுக்கு அளிக்கப்பட்ட ஊதியம் (ரூ. இலட்சங்களில்)

வ. எண்.	ஊதிய விபரம்	முக்கிய அதிகாரிகள்		மொத்தம்
		தலைமை கணக்கு அலுவலர்	நிறுமச் செயலர்	
		திரு. C.ஆறுமுகம்	திரு. A. சங்கரலிங்கம்	
1.	நிகர சம்பளம்	9.75	7.20	16.95
	– வருமான வரி சட்டம், 1961 பிரிவு எண் 17 (1)–ன் படி	–	–	–
	– வருமான வரி சட்டம், 1961 பிரிவு எண் 17 (2)ன்படி சலுகைகளின் மதிப்பு	–	–	–
2.	அளிக்கப்பட்ட பங்குகள்	–	–	–
3.	ஈடற்ற பங்குகள்	–	–	–
4.	தரகு தொகை	–	–	–
	மொத்தத்தில்%	–	–	–
	மற்றவை	–	–	–
5.	இதர தொகைகள்	–	–	–

(ஈ) நிறுமச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட தண்டனைகள், அபராதங்கள் விபரம்

வகைகள்	நிறும சட்டத்தின் பிரிவு	விபரம்	தண்டனை விபரம்	தண்டனை விதித்தவர்	மேல் முறையீடு
அ) நிறுமத்தின் மீது அபராதங்கள் தண்டனைகள் எதிர்கொண்டு கட்டப்பட்ட அபராதம் ஆ) இயக்குநர்கள் மீது அபராதங்கள் தண்டனைகள் எதிர்கொண்டு கட்டப்பட்ட அபராதம் இ) மற்ற அதிகாரிகள் மீது அபராதங்கள் தண்டனைகள் எதிர்கொண்டு கட்டப்பட்ட அபராதம்	எதுவும் இல்லை				

(இயக்குநர்கள் குழுவின் ஆணைப்படி)

இடம் : சென்னை
நாள் : 19.08.2026

R. **கண்ணன். இ.ஆ.ப**
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்

படிவம் எண்: AOC-1

துணை நிறுவனங்கள் அல்லது கூட்டு நிறுவனங்கள் அல்லது கூட்டு முயற்சி நிறுவனங்களின் நிதி அறிக்கையின் முக்கிய அம்சங்களை உள்ளடக்க அறிக்கை

(விதி 4A & 5 நிறுமங்களின் (கணக்குகள்) விதிகள், 2014உடன் படிக்கப்படும் பிரிவு 129 இன் துணைப் பிரிவு (3) இன் முதல் பிரிவுக்கு உட்பட்டது)

பகுதி (அ): துணைநிறுமங்கள்

(வெளியிடப்பட்ட ஒவ்வொரு துணை நிறுமம் தொடர்புடைய தகவல்கள் தொகை ரூபாயில்.)

வ.எண்	விவரங்கள்	விவரங்கள்
1	வ.எண்	1
2	துணை நிறுமத்தின் பெயர்	பெரம்பலூர் சர்க்கரை ஆலை (வரை)
3	துணை நிறுவனத்தை கையகபடுத்திய நாள்	நிறுமம் நிறுவுகை செய்யப்பட்ட நாள்–24.7.1976
4	துணை நிறுவனங்களுக்கான அறிக்கையிடும் நிதியாண்டு இது முதன்மை நிறுமத்தின் அறிக்கையிடும் நிதியாண்டிலிருந்து வேறுபட்டால்	முதன்மை நிறுமத்தின் அறிக்கையிடும் நிதியாண்டே துணை நிறுமத்திலும் பின்பற்–படுகின்றது
5	வெளிநாட்டில் செயல்படும் துணை நிறுவனங்களில் தொடர்புடைய நிதியாண்டின் கடைசி தேதியில் வெளியிடப்பட்ட நாணய & பரிமாற்ற விகிதம்	இந்திய ரூபாய்களில்–இல்லை
6	பங்கு மூலதனம் (செலுத்தப்பட்டது)	Rs.38,00,34,770.00
7	ஒதுக்கீடுகளும் & உபரிகளும்	(–) Rs. 3,82,23,60,322.00
8	மொத்த சொத்துகள்	Rs.1,21,07,99,269.72
9	மொத்த பொறுப்புகள்	Rs.2,94,20,80,741.00
10	முதலீடுகள்	Rs.5,11,300.00
11	மொத்த விற்பனை வருமானம்	Rs.84,05,70,982.00
12	வரிக்கு முந்தைய இலாபம்	(–) Rs.23,60,10,294.00
13	வருமான வரிக்கான ஒதுக்கீடு	––
14	வரிக்கு பிந்தைய இலாபம்	(–) Rs.23,60,10,294.00
15	வெளியிடபடவுள்ள பங்காதாயம்	––
16	பங்குகளை வைத்துள்ள அளவு (சதவிகிதத்தில்)	94.98%

குறிப்புகள்: அறிக்கையின் முடிவில் பின்வரும் தகவல் வழங்கப்படும்

1. இன்னும் செயல்பட துவங்காத துணை நிறுவனங்களின் பெயர்கள்.

2. நடப்பாண்டில் கலைக்கப்பட்ட அல்லது விற்பனை செய்யப்பட்ட துணை நிறுவனங்களின் பெயர்கள் பகுதி (ஆ): இணை நிறுவனங்களும் கூட்டு முயற்சி நிறுவனங்களும்

நிறுமங்களின் சட்டம் 2013 பிரிவு 129(3) இணங்க இணை நிறுவனங்கள் கூட்டுமுயற்சி நிறுவனங்கள் ஆகியவற்றின் தொடர்புடைய அறிக்கை

	இணை நிறுவனங்கள் மற்றும் கூட்டு முயற்சி நிறுவனங்களின் பெயர்	பெயர்–1
1	கடைசியாக தணிக்கை செய்யப்பட்ட இருப்புநிலை குறிப்பின் தேதி	எதுவும் இல்லை
2	ஆண்டிறுதியில் நிறுவனத்தால் நடத்தப்படும் இணை நிறுவனங்கள் / கூட்டுபங்கு நிறுவனங்களின் பங்குகள் (i) பங்குகளின் எண்ணிக்கை (ii) இணை நிறுவனங்களில் அல்லது கூட்டு முயற்சி நிறுவனங்களில் முதலீட்டு தொகை (iii) பங்குகளை வைத்துள்ள அளவு (சதவிகிதத்தில்)	
3	கணிசமான செல்வாக்கு எவ்வாறு உள்ளதென விவரித்தல்	
4	இணை நிறுவனம் மற்றும் கூட்டு முயற்சி நிறுவனம் ஆகியவற்றின் அறிக்கைகள் ஏன் ஒருங்கிணைக்கப்படவில்லை என்பதற்கான காரணம்	
5	கடைசியாக தணிக்கை செய்யப்பட்ட ஐந்தொகை குறிப்பின்படி முதன்மை நிறுவனம் பங்கு வைத்திருப்பதற்கு காரணமான நிகரமதிப்பு	
6	நடப்பாண்டின் இலாபம் / நட்டம் (i) அறிக்கை ஒருங்கிணைப்பதாக கருதப்படுவது (ii) அறிக்கை ஒருங்கிணைப்பதாக கருதப்படாதது	

1. இன்னும் செயல்படத் துவங்காத இணை நிறுவனங்கள் மற்றும் கூட்டு முயற்சி நிறுவனங்களின் பெயர்கள்.

2. நடப்பாண்டில் கலைக்கப்பட்ட அல்லது விற்பனை செய்யப்பட்ட இணை நிறுவனங்கள் மற்றும் கூட்டு முயற்சி நிறுவனங்களின் பெயர்கள்

குறிப்பு: ஐந்தொகை குறிப்பு சான்றிதழை வழங்கிய அதே முறையில் இந்த படிவச் சான்றிதழையும் சான்றளிக்கப்பட வேண்டும்.

இடம் : சென்னை
நாள் : 19.08.2026

R. **கண்ணன். இ.ஆ.ப**
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்

படிவம் எண். எம்.ஆர்.3

31.3.2026 உடன் முடிவடைந்த நிதி ஆண்டிற்கான

தொழில் முறை நிறுமச் செயலரின் தணிக்கை அறிக்கை

(நிறுமங்களின் சட்டம், 2013 பிரிவு 204(1) மற்றும் நிறுமங்களின் (மேலாண்மை அலுவலர்களின் நியமனமும் மற்றும் சம்பளமும்) விதிகள் 2014, விதி எண்.9 ஆகியவற்றிற்கு இணங்க)

பெறுநர்:

உறுப்பினர்கள்,
தமிழ்நாடு சர்க்கரைக் கழகம்,
சென்னை.

தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் (சிஐஎன்–யூ15421டிஎன்1974எஸ்ஜிசி006753) (இதன் பின்னர் இது நிறுமம் என்றே அழைக்கப்படும்) பொருந்தக்கூடிய சட்டப்படியான நிபந்தனைகள் மற்றும் நிறுமங்களுக்கான நல்ல நடைமுறைகள் சரியாக பின்பற்றப்படுகின்றதா என்றும் சரிபார்த்து ஆய்வு செய்திடும் தொழில்முறை செயலர்களின் தணிக்கை பணி எங்களால் மேற்கொள்ளப்பட்டது. நிறுமங்களின் நடவடிக்கைகள் / சட்டப்படியான நிபந்தனைகள் அனைத்தும் பின்பற்றப்படுகின்றதா என நியாயமான அடிப்படையில் ஆய்வு செய்து எங்களுக்கு கிடைக்கப்பெற்ற ஆவணங்களின் அடிப்படையில் / எங்களுக்கு வழங்கப்பட்ட ஒரு சில நடைமுறைகளில் உள்ள வழிமுறைகளின்படி தணிக்கை நடத்தப்பட்டு, எங்களுடைய கருத்துக்களை பின்வருமாறு கூற விழைகின்றோம்.

இந்நிறுமத்தால் பராமரிக்கப்படும் புத்தகங்கள், ஆவணங்கள், கூட்ட அறிக்கை புத்தகங்கள், படிவங்கள், சமர்ப்பிக்கப்பட்ட காலமுறை அறிக்கைகள், இதர ஆவணங்கள் ஆகியவற்றை சரிபார்த்ததன் அடிப்படையிலும் மற்றும் 04 ஆகஸ்ட் 2026 தேதியிட்ட சுயாதீன தணிக்கையாளர்களின் அறிக்கையின் நகல் அடிப்படையிலும், எங்களுக்கு கிடைக்கப் பெற்ற ஆவணங்களை சரிபார்த்ததன் அடிப்படையிலும், இந்த நிறுமச் செயலகத் தணிக்கையின் போது இந்நிறுமத்தில் பணிபுரியும் அலுவலர்கள், முகவர்கள் மற்றும் அங்கீகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆகியோரால் எங்களுக்கு அளிக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் தகவல்களின் அடிப்படையில் மற்றும் மேற்கூறிய சுயாதீன கணக்காய்வாளர் அறிக்கையில் வழங்கப்பட்டுள்ள அவதானிப்புகள்மற்றும்கருத்துக்களின்அடிப்படையில்எங்களின்கருத்துரைகளையும், புரிதல்களையும் அறிக்கையாக வழங்குகின்றோம். எங்களுக்கு அளிக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் தகவல்களின் அடிப்படையில், எங்களுடைய வரையறுக்கப்பட்ட ஆய்வுகளின்படி, இந்நிறுமமானது 31.3.2026 அன்றுடன் முடிவடைந்த நிதி ஆண்டில் கீழே குறிப்பிட்டுள்ள சில விடுதல்களைத் தவிர சட்ட வழிமுறைகளை பின்பற்றியுள்ளது. கீழே பட்டியலிடப்பட்டுள்ள சட்டப்படியான நிபந்தனைகள், இயக்குநர்களின் குழுவின் செயல்முறைகள் மற்றும் தொழில்நுட்பங்கள் சரியாகப் பின்பற்றப்படுகின்றதா என்பது பற்றிய எங்களின் தணிக்கை அறிக்கை பின்வருமாறு:

31.3.2026 அன்றுடன் முடிவடைந்த நிதி ஆண்டிற்கான எங்களுக்கு வழங்கப்பட்ட இந்நிறுமத்தால் பராமரிக்கப்படும் புத்தகங்கள், ஆவணங்கள், கூட்ட அறிக்கை புத்தகங்கள், படிவங்கள், சமர்ப்பிக்கப்பட்ட காலமுறை அறிக்கைகள், இதர ஆவணங்கள் ஆகிய அனைத்தும் கீழ்க்கண்ட சட்டப்படியான, அவற்றிற்குரிய விதிமுறைகளின்படி பராமரிக்கபடுகின்றதாவென எங்களால் ஆய்வு மேற்கொண்டு சரிபார்க்கப்பட்டது.

(i) நிறுமங்களின் சட்டம் 2013 மற்றும் பொருந்தக்கூடிய விதிகள்.

(ii) பங்கு பத்திர ஒப்பந்தங்கள் (ஒழுங்குமுறை) சட்டம், 1956, (எஸ்சிஆர்ஏ) மற்றும் அதனுடைய விதிகள்.

(iii) பங்கு டெபாசிட்டரீஸ் சட்டம், 1996 ஒழுங்குமுறைகள் மற்றும் அதனுடைய துணை விதிகள்.

(iv) அந்நிய செலாவணி நிர்வகித்தல் சட்டம், 1999 மற்றும் நேரடி அந்நிய முதலீடுகள், கடல் கடந்த நேரடி முதலீடுகள், வெளிநாடுகளின் வியாபார கடன்கள் ஆகியவற்றிற்கான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள்.– இந்நிறுவனத்திற்கு பொருந்தாது;

(v) நடப்பாண்டில், இந்நிறுமத்தின் பங்குகள் பட்டியலிடப்படாததால், இந்தியப் பங்குச் சந்தைகளின் பரிமாற்றக் குழு (செபி) சட்டம், 1992–ன் கீழ்க்கண்ட ஒழுங்குமுறை மற்றும் வழிமுறைகள், இந்நிறுமத்திற்கு பொருந்தக்கூடியதல்ல.

அ) இந்தியப் பங்குச் சந்தைகளின் பரிமாற்றக் குழு (பங்குகளை வலுவான முறையில் தன்னகப்படுத்துதல், எடுத்துக் கொள்ளுதல்) ஒழுங்குமுறைகள் சட்டம், 2011.

ஆ) இந்தியப் பங்குச் சந்தைகளின் பரிமாற்றக்குழு (உள்ளடி வியாபாரங்களை தடுத்தல்) ஒழுங்குமுறைகள் சட்டம், 2015.

இ) இந்தியப் பங்குச் சந்தைகளின்பரிமாற்றக் குழு (முதலீட்டு பத்திரங்களை வெளியிடுதல் மற்றும் தகவல் தெரிவித்தல்) ஒழுங்குமுறைகள் சட்டம், 2018.

ஈ) இந்தியப் பங்குச் சந்தைகளின் பரிமாற்றக் குழு (பங்கு அடிப்படையிலான பணியாளர் கொடை மற்றும் உழைப்பு ஊதிய பங்கு), ஒழுங்குமுறை சட்டம், 2021.

உ) இந்தியப் பங்குச் சந்தைகளின் பரிமாற்றக் குழு (மாற்ற முடியாதபத்திரங்கள் மற்றும் பங்குகளைப்பதிவு) ஒழுங்குமுறைகள் சட்டம், 2021.

ஊ) இந்தியப் பங்குச் சந்தைகளின் பரிமாற்றக் குழு (பங்குகளை வெளியிடும் பதிவு நிறுவனம் பங்குகளைப் பரிமாற்றம் செய்யும் முகவர்களும்) ஒழுங்கு முறைகள் சட்டம், 1993 / செபி (பங்குகளை வெளியிடுவதற்கான பதிவேடுகளும் பங்குகளைப் பரிமாற்றம் செய்யும் முகவர்களும்) ஒழுங்கு முறைகள் சட்டம், 2025, நாள். 15.12.2025 அன்று முதல் அமலுக்கு வரும் வரை.

எ) இந்தியப் பங்குச் சந்தைகளின் பரிமாற்றக் குழுவின் (பங்குகளை பங்குச் சந்தையில் பட்டியலிடுதலிலிருந்து திரும்பப் பெறுதல்) ஒழுங்குமுறைகள் சட்டம், 2021 மற்றும்

ஏ) இந்தியப் பங்குச் சந்தைகளின் பரிமாற்றக்குழுவின் (பங்குகளை திரும்ப வாங்கிக் கொள்ளுதல்) ஒழுங்குமுறைகள் சட்டம், 2018.

vi) நிர்வாகத்தால் உறுதிப்படுத்தப்பட்டபடி, சர்க்கரைத் தொழிலாக இருக்கும் இந்நிறுவனத்திற்கு குறிப்பாகப் பொருந்தக்கூடிய சட்டங்களைப் பின்பற்றி, இவற்றுக்கான இணக்கம் ஆலை மட்டத்தில் செய்யப்படுகிறது, 'ஈ' முதல் 'ஏ' வரை உள்ள இனங்களில், தலைமை அலுவலக மட்டத்தில் அவை கவனமாகப் பின்பற்றப்படுகின்றன.

அ) இந்திய கொதிகலன்கள் சட்டம், 1923

ஆ) உணவு பாதுகாப்பு மற்றும் தரச்சட்டம், 2006

இ) அத்தியாவசிய பொருட்களின் சட்டம், 1955

ஈ) பொது நிறுவனங்களின் பணியகத்தின் அறிவுத்தல்கள் (பீபிஇ)

உ) பொதுத்துறை நிறுவன வழிகாட்டிகள் (பிஎஸ்யூ)

ஊ) சர்க்கரை சுங்க வரிச்சட்டம், 1982

எ) சர்க்கரை வழங்கும் விலை சமப்படுத்தும் சட்டம்,1976

ஏ) சர்க்கரை மேம்பாட்டு நிதி சட்டம், 1982

ஐ) ஏற்றுமதி (தரக்கட்டுப்பாடு மறுறும் ஆய்வு) சட்டம், 1963

ஒ) வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு ஏற்றுமதி சட்டம், 1986

ஓ) தொழில்துறை மற்றும் தொழிலாளர் சட்டங்கள் அதாவது தொழிற்சாலை மற்றும் பணியாளர்நலனைக் கட்டுப்படுத்தும் சட்டங்கள்.

ஔ) சுற்றுச்சூழல் சட்டங்கள் அதாவது காற்று, நீர் போன்றவை.

மேலும் பொருந்தக்கூடிய பின்வரும் இனங்கள் சரியாக பின்பற்றப்படுகின்றதா எனவும் எங்களால் ஆய்வு செய்யப்பட்டது.

(i) இந்தியப் பங்குச் சந்தைகளின் பரிமாற்றக் குழு (பட்டியலிடுதல்களின் பொறுப்பு மற்றும் தேவையான தகவல் வெளிப்படுத்துதல்) ஒழுங்குமுறைகள் சட்டம், 2015–ன்படி பங்குகளை பட்டியலிடுவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் – இந்நிறுமத்திற்கு பொருந்தாது. ஏனெனில், இந்நிறுமத்தின் பங்குகள் பங்குச் சந்தையில் பட்டியலிடப்படவில்லை;

(ii) தணிக்கை ஆண்டில் இந்திய நிறுமச் செயலர்களின் பயிற்று நிறுவனத்தால் வெளியிடப்பட்ட இயக்குநர்களின் குழுக்கூட்டம் (எஸ்எஸ்–1) மற்றும் பொதுப்பேரவை கூட்டம் (எஸ்எஸ்–2) தொடர்புடைய தர நிர்ணய நடைமுறைகள்.

இந்நிறுவனம் ஒரு தமிழ்நாடு மாநில அரசு நிறுவனம் (பொது வரையறுக்கப்பட்ட நிறுவனம்) மற்றும் நிறுவனங்கள் சட்டம், 2013 இன் விதிகளின் கீழ் ஒரு மாநில அரசு நிறுவனமாக இருப்பதால், அரசு நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட அனைத்து விலக்குகள் மற்றும் சலுகைகளுக்கு இது தகுதியானது என்பது எங்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதிப்பாய்வு செய்யப்பட்ட காலப்பகுதியில், நிறுவனம் கீழே தெரிவிக்கப்பட்டுள்ள சில மீறல்களைத் தவிர, மேலே குறிப்பிட்டுள்ள சட்டம், விதிகள், ஒழுங்குமுறைகள், வழிகாட்டுதல்கள், தரநிலைகள் போன்றவற்றின் பொருந்தக்கூடிய விதிகளின்படி பூர்த்தி செய்யப்பட வேண்டிய தேவைகளுக்கு நிறுவனம் இணங்கியுள்ளது. அவையாவன:

1. நிறுவனத்தின் பொதுப்பேரவைக் கூட்டங்களை நடத்தும் விதம் மற்றும் மின்–வாக்களிக்கும் முறை வசதிக்கான ஏற்பாடுகள்.

2. சட்டம் மற்றும் செயலக தரநிலைகளின் தேவைகளுக்கு ஏற்ப கூட்ட நடவடிக்கை குறிப்புகள் மற்றும் பதிவுகளை பராமரித்தல்.,

3. சட்டத்தின் தேவைகளுக்கு ஏற்ப இயக்குநர்களின் நியமனம் ¯ நிறுத்தம் மற்றும் நிறுவனத்தின் கூட்டங்களில் அவர்கள் பங்கேற்பது.

4. சுயாதீன இயக்குநர்கள் நியமனம் மற்றும் கூட்டங்களில் பங்கேற்றல்

5. இயக்குநர் குழுவின் அறிக்கை மற்றும் நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கைகளில் கையெழுத்திட்டு ஒப்புதல்

6. பங்குகளை பரிமாற்றம் / பரிமாற்றம் செய்வதற்கான நடைமுறைகள் மற்றும் பங்குதாரர்களின் விவரங்கள் மற்றும் அது தொடர்பான குழுவின் பதிவேடுகள் பராமரிப்பு.

7. சட்டப்பிரிவுகளின் கீழ் தேவைப்படும் படிவங்கள் / வருமானங்களை தாக்கல் செய்தல்.

8. நிறுமங்களுக்கு இடையே உள்ள கடன்கள் / முன்பணங்கள்/ முதலீடு தொடர்பான சட்டப்படி தேவைப்படும் பரிவர்த்தனை விவரங்கள்

9. பெரம்பலூர் சுகர் மில்ஸ் லிமிடெட் என்ற துணை நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூ.10/–க்கான 13.30% மீட்டெடுக்கக்கூடிய (20 ஆண்டுகளுக்குள்) 17,11,04,408 எண்ணிக்கையிலான ஒட்டுமொத்த திரண்ட பலன் அல்லாத விருப்பப் பங்குகள் (வழிவகை கடனை மாற்றியமைப்பதிற்காக தமிழ்நாடு அரசால் அனுமதிக்கப்பட்டது), ரூ. 1,71,10,44,080/– ஆகும். நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கை, துணை நிறுவனமான பெரம்பலூர் சர்க்கரை ஆலைகள் லிமிடெட்டில் அதன் முதலீட்டை பிரதிபலிக்கும் விதமாக ஒவ்வொன்றும் ரூ.10/– மதிப்புள்ள 3,60,97,501 ஈக்விட்டி பங்குகள் முழுமையாக செலுத்தப்பட்டுள்ளன எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசிடமிருந்து உத்தரவுகளைப் பெற்ற பிறகு விருப்பப் பங்குகள் உரிய கணக்கியல் முறையில் வகைப்படுத்தப்படும்.

10. கணக்கியல் மென்பொருள் தணிக்கைப்பாதை இல்லா அம்சத்துடன் பராமரித்தல்.

11. தணிக்கைக் குழுவின் அமைப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய செயல்முறைகள்

12. சுயாதீன இயக்குநர்களின் தனிப்பட்ட கூட்டம்

